# கத்தார் பிரதமரின் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் (டிசம்பர் 03, 2016)

**நவம்பர் 24, 2016**

1. கத்தார் பிரதமர் மற்றும் மாநில உள்துறை அமைச்சர் மாண்புமிகு ஷேக் அப்துல்லா பின் நாசர் பின் கலீஃபா அல் தானி அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அழைப்பின் பேரில் டிசம்பர் 3 ஆம் தேதி, 2016 இல் இந்தியாவிற்கு வருகை செய்ய உள்ளார். இந்த விஜயத்தின் போது, கட்டாரி பிரமுகர் பொதுவான ஆர்வம் சார்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு விவகாரங்கள் குறித்து பிரதமருடன் கலந்துப் பேசுவார்கள்.
2. இதுவே மாண்புமிகு ஷேக் அப்துல்லா அவர்களின் இந்தியாவிற்கான முதல் வருகையாக இருப்பதுடன், கத்தாருடன் இந்தியாவின் வளர்ந்து வரும் உறவுகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான மூன்றாவது உயர் மட்ட இருதரப்பு ஈடுபாடகவும் உள்ளது. மார்ச் 2015 இல் இந்தியாவிற்கு கட்டாருடைய எமிர் ஹெச்ஹெச் ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தனி அவர்களின் வருகை டொடர்ந்து ஜூன் 2016 இல் கத்தாருக்கு நமது பிரதமர் நரேந்திர மோடி வருகை அமைந்தது.
3. பரஸ்பர நன்மை வணிக பரிமாற்றங்கள் மற்றும் விரிவான மக்கள்-மக்கள் தொடர்புகளை அடிப்படையாக கொண்டு கத்தாருடன் நாம் கொண்டுள்ள நெருங்கிய மற்றும் நேச உறவுகள் உள்ளது. வளைகுடாப் பகுதியில், கத்தார் மட்டுமே ஒரு முக்கியமான வர்த்தக பங்காளியாக இருப்பதுடன் 2015-16 இல் நமது மொத்த இறக்குமதியில் 66% பங்களிப்பு கொண்டு நமக்கு திரவ இயற்கை எரிவாயுவில் (எல்என்ஜி) பெரிய அளிப்பாளராக உள்ளது.
4. கத்தாருக்கு புலம்பெயர்ந்த சமூகத்தினரில் பெரும்பாலானோர் இந்தியர்களாக அமைந்ததுடன், குடியேறிய நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக அவர்களது ஆக்கப்பூர்வமான பங்களிப்பு அங்கு நன்கு

அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கத்தாரில் பணிபுரியும் இந்தியர்கள் 630,000 க்கும் மேல் உள்ளனர்.

**புது தில்லி,**
**நவம்பர் 24, 2016**